**செ. கு. எண்**: 392 **நாள்**: 04.11.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 4.11.2012

30.10.2012 அன்று இரவு, மதுரை மாவட்டம், எஸ்.புளியங்குளம் கிராமத்தை சேர்ந்தவர்கள் பசும்பொன்னில் தேவர் சமாதியில் மரியாதை செலுத்திவிட்டு, டாட்டா சுமோ வாகனத்தில் திரும்பி சென்று கொண்டிருந்தபோது, மதுரை அவனியாபுரம் அருகே அவ்வாகனத்தை நிறுத்தி அதன்மீது திடீரென எரியூட்டப்பட்ட பெட்ரோல் நிரப்பிய புட்டிகளை சில சமூக விரோதிகள் எறிந்துள்ளதையடுத்து அவ்வாகனத்தில் பயணம் செய்தவர்களில், பலத்த தீக்காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் திரு. ஜெயபாண்டி 3.11.2012 அன்றும், திரு. சேகர் என்பவரின் மகன் திரு. சுந்தரபாண்டி மற்றும் திரு. ராஜா என்பவரின் மகன் திரு. வெற்றிவேல் ஆகியோர் 4.11.2012 அன்றும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் சொல்லொணாத் துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திரு. ஜெயபாண்டி, திரு. சுந்தரபாண்டி மற்றும் திரு. வெற்றிவேல் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெயபாண்டி, திரு. சுந்தரபாண்டி மற்றும் திரு. வெற்றிவேல் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**